தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.12.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளான புதிய குடியிருப்புத் திட்டப் பணிகளை 14.12.2024 அன்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனை, தங்கசாலை மேம்பாலம் அருகில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அமைக்கப்பட்டு, நடைபெற்று வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு களஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் மணிவண்ணன், மண்டலக் குழுத்தலைவர் .ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு. சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மாநகராட்சி செயற்பொறியாளர் .லோகேஸ்வர், மாமன்ற உறுப்பினர்கள் .நவீன் தாஹா, பரிமளம், .எம்.இஸட்.ஆசாத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

புதுதில்லி டாக்டர். அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று (15.12.2024) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர். வீரேந்திரகுமார் அவர்களின் தலைமையில், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 7வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பாக, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர். மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் முன்னோடி திட்டங்களின் நிலையினை எடுத்துரைத்து, கோரிக்கைகளை பரிசீலித்து அதற்கான நிதியினை விரைவாக விடுவிக்க ஒன்றிய அமைச்சரிடம் கடிதம் வழங்கினார். இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர்/ மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி எம்.லஷ்மி உடனிருந்தார்.

டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் மா. சுப்பிரமணியன், காரம்பாக்கம் கணபதி, பிரபாகர்ராஜா பங்கேற்பு !

151 வது வார்டில் எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம், 547 பேருக்கு நல உதவிகள் !

சைதை சாதிக், இளம் பேச்சாளர் ஜெ. விக்னேஸ்வரி சிறப்புரை! ச.சங்கர் கணேஷ் எம்.சி ஏற்பாடு!

சென்னை டிச:16

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் மனிதநேய உதயநாள் விழா தமிழ்நாடு துணை முதல மைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்,151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ் ஏற்பாட்டில் போரூர், அன்னை சத்யா நகர், பூத்தப்பேடு பிரதான சாலையில் இன்று (16.12.2024) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் தெருமுனைக் கூட்டம் மற்றும் 547 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

151வது வட்டக் கழக செயலாளர் அ.மோசஸ்,மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன் மற்றும் ஆர்.சேகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பளார் செ.இரவி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பளார், கூடுதல் அரசு வழக்கறிஞர் எஸ். தனசேகர்,வட்ட கழக நிர்வாகிகள செ. இராமையா, எம்.சிவா, கே.முரளி,கு. விமலாசேகர், வீ.பன்னீர்செல்வம், கோ.கண்ணதாசன், ஆர்.முரளிகிருஷ்ணன், ப.சரவணன் மோ.சுந்தர்,கே.குமார், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பளார் சண்முகம்,பகுதி தொழிலாளர் அணி அமைப்பாளர் ரகு ஆகியோரின் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் ,தலைமை கழக இளம் பேச்சாளர் ஜெ.விக்னேஷ்வரி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி.,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம் ஆகியோர் 547 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் வடக்கு பகுதி செயலாளர்,மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அய்யப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தலைமை செயற்குழு உறப்பினர் எஸ். அருணாசலம்,மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் எஸ். பத்ம பிரியா,தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ. செல்வகுமார் எம்.சி,வீரகனிமொழி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ. விஜயபாலா,வி. ராஜேஷ்,எஸ்.பி.அருள், கே. குமரேசன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.வினாய கமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ. தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன் இரா.பால்பாண்டியன் எஸ். பாரதிஅண்ணாவேலவன், கே.ராஜீ, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ் த. ரமேஷ், சி.சுந்தர் தி.சார்லஸ், ஆ.ராதாசெல்வம் மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதாகணபதி, செல்விரமேஷ், சாந்திராமலிங்கம்,

மாவட்ட பிரதிநிதிகள் க. கைலாசம் இரா.ராஜேந்திரன் எம்.எல்.நாதன், கோ.இராமலிங்கம், எத்திராஜ்,ராமகிருஷ்ணன் எஸ்.ரவி, திருநாவுகரசு, நாராயணன், சிவலிங்கம்,

மதுரவாயல் தெற்கு பகுதி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மா.பா.சித்ராலயம், நல்லதம்பி,மன்மதராஜ் ஜி.ஏ.துரை, நா.அப்துல்கபூர் ஐபன் பாலாஜி,கருணாகரன் ப.ரமேஷ், பொன்மணிமாறன், ராஜேஷ், ஜெரோம்ஜெயராஜ், பாஸ்கர், மதிவாணன். மோகன்,ராகேஷ், சுரேஷ்,பி. சுரேஷ் தேவேந்திரன், பிரதாபன்,ஆனந்த், ஹரிஹரன் த.பிரகாஷ் உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

வட்ட இளைஞர் அணியை சார்ந்த ஏ.செந்தில்குமார் மற்றும் எம்.வினோத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நடைப்பயிற்சி – குளியல் – உணவுக் கட்டுப்பாடு என

கோயில் யானைகளுக்கு அனைத்துப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன!

சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச.16-

கோயில்களில் உள்ள யானைகளுக்கு நடைப்பயிற்சி, குளியல், உணவுக் கட்டுப்பாடு, தேவையான மருந்து, மாத்திரைகள் என அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது என சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசும் போது குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது, இந்த அரசு பதவியேற்றதிலிருந்து கோயில் யானைகளுக்கு புத்துணர்வு முகாம்கள் நடத்தப்படாத காரணத்தினால், திருச்செந்தூரில் யானைப்பாகன் உயிரிழந்திருக்கிறார். நெல்லையப்பர் கோயிலில் கோயில் யானை உடல்நலமின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்குள்ள பக்தர்கள் மிகுந்த மன வேதனையில் இருக்கிறார்கள். அதனால் கோயில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் பி.கே.சேகர்பாபு, 26 திருக்கோயில்களில் இருக்கின்ற 28 யானைகளுக்கு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் குளியல் தொட்டிகளும், 15 நாட்களுக்கு ஒரு முறை கால்நடை மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்வதும், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வனத் துறையினர் வருகை தந்து ஆய்வு செய்து, அந்தத் திருக்கோயில்களில் உள்ள யானைகளினுடைய நிலையைக் கண்டறிந்து, அதற்குண்டான சான்றிதழ்களும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், திருக்கோயில் யானைகள்மீது கொண்டிருக்கின்ற கரிசனம் இந்த ஆட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு என்னவென்றால், மதுரையிலே இருக்கிற பார்வதி என்கிற யானைக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டவுடன் அதற்கு முறையான மருத்துவ சிகிச்சை வேண்டுமென்று, டென்மார்க்கிலிருந்து மருத்துவர்களை அழைத்துவந்து, பரிசோதனை செய்து, அந்த யானையின் உயிரைக் காப்பாற்றி, பார்வையைத் தந்த ஆட்சி இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, அவர்கள் புத்துணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டுமென் றார்கள். புத்துணர்வு முகாம்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து பயிற்சிகளையும், அதாவது, நடைப்பயிற்சி, குளியல், உணவுக் கட்டுப்பாடு, தேவைப்படுகின்ற மருந்து, மாத்திரைகள் முதற்கொண்டு அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. ஏதாவது சில கோயில்களில் அப்படியிருந்தால், உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்த யானையை புத்துணர்வு முகாமுக்கு அழைத்துச் செல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திருச்செந்தூரில் ஏற்பட்ட சம்பவம் அசாதாரணமான சம்பவம். அதற்குப் பிறகு அந்த யானையை முதலமைச்சர் அவர்களுடைய ஆணையோடு சென்று சந்தித்து, நானே அந்த யானைக்கு கரும்பு போன்ற அனைத்து உணவுகளையும் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். உங்கள் கட்சியினுடைய சட்ட மன்றத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் நெல்லையப்பர் திருக்கோயிலினுடைய யானையின் நிலையைப் பற்றி நேற்றைக்குச் சொன்னார். இன்றைக்கு அங்கு மருத்துவர்களை அனுப்பி பரிசோதித்திருக்கிறோம். தேவைப்பட்டால் எந்த உயர் சிகிச்சை வேண்டுமென்றாலும், புத்துணர்வு முகாமுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருந்தாலும் அழைத்து செல்லப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து யானைகளும் சுகமாக, நலமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

மழைநீர் ஊருக்குள் புகுந்து வீடுகள் - விளை நிலங்கள் பாதிப்பு!

துறையூர் தொகுதியில் வாய்க்கால் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 16-

சட்டப்பேரவையில் துறையூர் தொகுதி கழக உறுப்பினர் செ. ஸ்டாலின் குமார் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-

செ. ஸ்டாலின் குமார்: என்னுடைய துறையூர் தொகுதியில் பச்சை மலையில், கடந்த வாரம் பெய்த மழையின் காரணமாக செங்காட்டுப்பட்டி, கீரம்பூர், துறையூர் பெரிய ஏரி, துறையூர் சின்ன ஏரி, சித்திரப்பட்டி, சிங்காளந்த புரம், மாதனூர், தவிட்டுப்பட்டி, கட்டனாம்பட்டி, நல்லியம்பட்டி, செல்லிப்பாளையம், மருவத்தூர், கிருஷ்ணாபுரம், சிக்கந்தாபூர், கோவிந்தாபுரம், முறுவூர் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் மழைநீர் ஊருக்குள் புகுந்து, விவசாய நிலங்களும், வீடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து இந்த வாய்க்கால் தூர்வாரப்படாமல் இருக்கிறது. எனவே, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த வாரம் எங்களுடைய தொகுதி மக்கள் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் நேரடியாக சென்று விளைநிலங்களும், வெங்காயமும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தங்களுடைய கோரிக்கையை சொல்லியிருக்கிறார்கள். எனவே, நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக இந்த வாய்க்காலைத் தூர்வாரி நிறைய இடங்களில் அந்த கரைகள் உடைந்து விவசாய நிலங்களிலும், வீடுகளிலும் தண்ணீர் புகுந்துள்ளது. எனவே, நிரந்தரத் தீர்வு காண்பதற்காக நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: உறுப்பினர்கள் கூறிய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற தமிழக அரசு தான் அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் இதை கேட்டுக்கொண்டிருக்கிறார். மிகவும் கனிவுள்ள ஒரு நிதியமைச்சர்.

இதை கருணையோடு கவனித்து இந்த ஆண்டு எனக்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டு மென்று உங்கள் சார்பாக அவரை நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கழக கொடியேற்றி கல்வெட்டு திறந்து வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய கழகச் செயலாளர் கே.அரிகிருஷ்ணன், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நிர்வாகிகள் கே.ஏ.மதியழகன், மோகனசுந்தரம், என்.நந்தகோபால், பி.ஜி.சேகர், கொப்பூர் தீலிப்ராஜ், செங்கோட்டவன், எம்.முத்து, சத்யா, ஆர்.டில்லி, ஆர்.ஆணழகன், அருண்குமார், ஆர்.வாசு, எம்.கார்த்திக், மதுசூதனன், ராமகிருஷ்ணன், ஆர்.ராஜேந்திர குமார், எம்.ராம்தாஸ், எம்.பாபு, சி.ஆர்.மணிகண்டன்,எம்.கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி, 63 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் தலைமையில், பகுதிச் செயலாளரும், 9 வது மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, இம்ரான் சிறப்புரை ஆற்றினர். வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், மு.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி. இளையராஜா, எஸ்.கே.ராஜ், பி.பாலச்சந்தர், குலசை அமான், நெல்லை புகாரி, புல்லட் ரமேஷ், ஸ்ரீதர், ஸ்ரீபிரியா, பாண்டுரங்கன், அமலநாதன், செல்வராஜ், வெங்கட், மா.சா.மணி, பி.சலாவுதீன், ஜே.டி.தீபக், பி.நவீன்குமார், என்.கார்த்திக், எம்.ரவிச்சந்திரன், எம்.சுமதிமீனாட்சி, சுந்தரம், வீ.ரமணி, எஸ்.நிஷா, ஜி.ஜெகன், மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், டிச.16

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடுக்குத்தகை ஊராட்சியில் நடைபெற்றது.

இதில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஷ்வரன், அக்னி ராஜேஷ், பிரியாகுமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி, ஒன்றிய நகரச் செயலாளர்கள் டி.தேசிங்கு, தி.வை.ரவி, மற்றும் யமுனா ரமேஷ், பொறியாளர் எம்.மோகன், ஆர்.லட்சுமி, பரமேஸ்வரி கந்தன், கு.தமிழ்செல்வம், நெமிலி சுரேஷ்குமார், என்.பி.மாரிமுத்து, ஜெ.சாக்ரடீஸ், எம்.குணசேகரன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு பல்வேறு விளையாட்டு அணிகளுக்கு கிரிக்கெட் கிட், கைப்பந்து கால்பந்து குத்துச்சண்டை கிட் பேக் மற்றும் 1000 பெண்களுக்கு சில்வர் குடம் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய அமைச்சர் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெண்களுக்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அமைத்து தந்த ஒரே அரசு தி.மு.க. அரசு தான். தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைகள் உருவாக்கி தர வேண்டும் என்று எண்ணத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் டைட்டில் பார்க், பல்வேறு தொழிற்சாலைகள் உருவாக்கி தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைகளை உருவாக்கித் தந்த அரசும் தி.மு.க. அரசு தான்.

அது மட்டுமல்லாமல் விளையாட்டில் ஆர்வம் காட்டும் விளையாட்டு வீரர்களுக்கு நமது தமிழ்நாடு துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பல்வேறு பரிசு திட்டங்களையும் வழங்கி சிறப்பித்து பெருமை சேர்த்து வருகிறார்.

நமது தி.மு.க. கழகத்தில் உள்ள இளைஞர்கள் வருகின்ற காலகட்டத்தில் திமுகவுக்காக இரவும் பகலும் பாராமல் உழைத்தால் அவர்களுக்கு ஒழிப்பிற்கு ஏத்த பதவிகள் தேடி வரும் என்று தெரிவித்தார்.

இதில் தலைமை கழக பேச்சாளர் திருவெற்றியூர் கருணாநிதி, யாசர் அராபத், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநில மாணவரணி செயலாளர் ஜெரால்டு, தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ்குமார், ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், வி.தியாகராஜன், ஆர்.பிரவீன் குமார், குமரேசன், கு.தமிழ்செல்வி, எஸ்.கமலக் கண்ணன், எஸ்.உதயா, ராஜேஷ் மற்றும் பலர் பங்கேற்றனர். ரமேஷ், பக்தாச்சலம், அரிபாபு, மகேஷ், பாஸ்கர், அஜித்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி உட்பட்ட புழல் ஒன்றிய சென்றம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராமு ஏற்பாட்டில் சென்னை வட கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். புழல் ஒன்றிய கழகத் பொறுப்பாளர் வழக்கறிஞர் சி.அற்புதராஜ் உடன் இருந்தார்

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, வார்டு154, இராமாபுரம், சாந்தி நகர், பரோடா வங்கி அருகில் இலக்கிய அணி பகுதி அமைப்பாளர் மூன்லைட் டி.ரவி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் விழாவை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம், 547 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்அருணாச்சலம், இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி கழக நிர்வாகிகள் வே. மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., கே.ராஜி எம்சி., வட்ட கழக செயலாளர் ஆ.ராதாசெல்வம், நாதன், கோ.ராமகிருஷ்ணன், ஏ. டிஎத்திராஜ், ஆர். சேகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செ.ரவி மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.